**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**
**வழக்கு எண்.77/2019**
**வழக்கு சாட்சி.3**

| | | |
|---|---|---|
| **பெயர்** | **:** | **சுதாகர்** |
| **தந்தை பெயர்** | **:** | **கருப்பையா** |
| **கிராமம்** | **:** | **இரயில்வேகாலனி** |
| **தாலுக்கா** | **:** | **திண்டுக்கல்** |
| **ஜாதி** | **:** | |
| **தொழில்** | **:** | **டெக்னீசியன், இரயில்வே** |
| **சமயம்** | **:** | |
| **வயது** | **:** | **34** |

**08.03. 2023**

**<u>1,2 எதிரிகள் ஆஜர்.</u>**
**<u>முதல் விசாரணை</u>**

நான் திண்டுக்கல் இரயில்வே காலனியில் குடியிருந்து வடக்கு இரயில்வேயில் டெக்னீசியனாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் மகஜரிலுள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 28.10.2017 ம் தேதி 05.00 மணி அளவில் மாலை 312 எண்ணுள்ள இரயில்வே கேட் பழுதடைந்து விட்டது. அதை சரி செய்வதற்காக அழைப்பின் பேரில் சென்றேன். அங்கு இரயில்வே கேட்டில் பழுது செய்து கொண்டிருக்கும் போது இரயில்வே தண்டவாளத்தை கடக்க முயன்ற வாகனத்திற்கும் கேட் கீப்பருக்கும் பிரச்சனை ஏற்பட்டது. அன்று 11.30.12.00 மணி அளவில் ஆய்வாளர் எங்களை 312 எண்ணுள்ள கேட்டிற்கு அழைத்து சென்று கையொப்பம் பெற்றார். **( பார்வைமகஜரிலுள்ள 1 வது கையொப்பம் மட்டும அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை .</u>**

போலிசார் என்னை எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் இரவு 11.00 மணி அளவில் காவல்நிலையத்தில் வைத்து சம்பவ தினத்தன்று விசாரித்தார்கள். என்னை விசாரிக்கும் போது காவல்நிலையத்தில் வைத்துது தான் எனது பெயர், முகவரி கூறினேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து வழக்கு சம்பவம் பற்றி மட்டுந்தான் என்னிடம் விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் தாளில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரி யாது என்றாள்னல சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI

Digitally signed by N MEENATCHI
Date: 2023.03.18 12:04:13 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**
**வழக்கு எண்.77/2019**
**வழக்கு சாட்சி.4**

| | | |
|---|---|---|
| **பெயர்** | **:** | **தனபாலசந்திரன்** |
| **தந்தை பெயர்** | **:** | **கந்தசாமி** |
| **கிராமம்** | **:** | **நேருஜி நகர்** |
| **தாலுக்கா** | **:** | **திண்டுக்கல்** |
| **ஜாதி** | **:** | |
| **தொழில்** | **:** | **இரயில்வே கண்காணிப்பாளர், ஓய்வு** |
| **சமயம்** | **:** | |
| **வயது** | **:** | **62** |

**08.03. 2023**
**1,2 எதிரிகள் ஆஜர்.**
**முதல் விசாரணை**

நான் தற்போது இரயில்வே துறையில் இரயில்வே கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று திண்டுக்கல்லில் குடியிருந்து வருகிறேன். கடந்த 28.10.2017 ம் தேதி மாலை 05.00 மணி அளவில் கேட் நம்பர் 312 கேட்டில் கேட் பழுதாகி உள்ளதாக கேட் கீப்பர் ஆனந்த் போன் மூலம் தகவல் சொன்னார். நான் நிர்வாகத்தில் தகவல் சொல்லி கேட்டை சரிசெய்வதற்காக டெக்னீசியனை அனுப்பி வைத்தேன். அன்றைய தினம் 06.30 மணி அளவில் கேட் கீப்பர் கேட்டை இரயில் கடப்பதற்காக அடைத்து விட்டு பணியை செய்து கொண்டிருந்த போது அருகிலுள்ள ஊர்க்காரர்கள் தனது வாகனம் இரயில்வே கேட்டை கடப்பதற்காக கேட்டை திறக்கச் சொல்லி தகராறு செய்து அடித்து விட்டதாக போன் மூலம் தகவல் சொன்னார். நான் போலிசுக்கு தகவல் சொல்லி நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை .**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் இரயில்வே துறையில் பணிபுரிவதால் அ.சா.1 க்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
**மறுவிசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI
Digitally signed by N MEENATCHI
Date: 2023.03.18 12:04:20 +0530

Judicial Magistrate No.II
Dindigul.